DEPOSITON OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
Assistant Sessions Judge, Sankari
IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI

| | |
|---|---|
| Calender | } |
| Miscellaneous | } |
| Preliminary Register | } |
| Sessions | } Case No.SC.171/2019 |
| Deposition of Witness | { PW.2 |
| | { Prosecution |
| | { |
| Name | : தங்கராஜ் |
| Father's Name | : --- |
| Taluk | :--- |
| Calling | :--- |
| Religion | :--- |
| Age | :--- |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 08.04.2024

2024 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 08 ஆம் நாள் அரசு தரப்பு சாட்சி என்பவரின் சாட்சியாகிய அ.சா.2 ன் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு 44 வது சட்டத்தின் 4 வது பிரிவின் கீழ் திரு.ந.பன்னீர்செல்வம்,பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிடப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு சாட்சி விசாரிக்கப்படுகிறார்.

எதிரிகள் ஆஜரில் உள்ளார்கள்.

முதல் விசாரணை

நான் மூலப்பாதையில் குடியிருந்து வருகிறேன். நான் எலெக்டிரிசியன் வேலை செய்கிறேன். அ.சா.1 யை தெரியும். 1,9 எதிரிகளை தெரியும். மற்ற எதிரிகளை தெரியாது. இந்த வழக்கை பற்றி எனக்கு நேரில் எதுவும் தெரியாது. அ.சா.1 க்கு சொந்தமான நிலம் மூலப்பாதையில் 4.5 ஏக்கர் இருப்பதாகவும், அந்த நிலத்தை சுமார் 20 நபர்கள் வந்து தன்னை அடித்து கையெழுத்து வாங்கியதாகவும் சொன்னார். ஆனால் நான் அந்த சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை. இது சம்பந்தமாக மாவட்ட குற்றப்பிரிவு காவல் துறையினர் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டியதன் பெயரில் அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பு குறுக்கு விசாரணை

நான் போலீஸ் விசாரணையின் போது எனக்கு சொந்தமான நிலம் மூலப்பாதையில் உள்ளதாகவும், அந்த நிலத்திற்கு அருகில் சடையன் என்பவருக்கு சொந்தமான நிலம்

இருந்ததாகவும், சடையனின் இரண்டு மகன்களும் திருமணமாகி தனிதனியாக வசித்த போது இளைய மகன் சின்னுசாமி ஏற்கனவே இறந்துவிட்டதாகவும், அவருடைய மனைவி பேபி மற்றும் அவரது 2 குழந்தையுடன் தனியாக வசித்து வந்ததாகவும், 10 ஆண்டுகளுக்கு முன்பே தன்னுடைய நிலத்தில் 2.29 ஏக்கர் நிலத்தை மூத்த மகன் முருகேசனுக்கு தானம் செய்து கொடுத்திருந்ததாகவும், அதனால் இளைய மகனின் மனைவி பேபி மீதமுள்ள 2.29 ஏக்கர் நிலத்தை தனக்கு எழுதி வைக்குமாறு கேட்டு தகராறு செய்து வந்ததாகவும், ஆனால் சடையனுக்கு தனது மருமகள் மீது நம்பிக்கை இல்லாமல் மூத்த மகன் பெயருக்கே மீதி நிலத்தையும் தானம் செய்து கொடுத்துவிட்டதாகவும், பின்பு சடையனை காணவில்லை என்று முருகேசன் என்னிடம் சொன்னார் என்றும், அதன் பிறகு 10 நாட்களுக்கு பின்பு காணாமல் போன சடையன் திரும்பி வந்துவிட்டதாகவும், சடையனை மகுடஞ்சாவடியை சேர்ந்தவர்கள் கடத்தி கொண்டு போய் முருகேசனுக்கு எழுதி வைத்த தான செட்டில்மெண்ட் பத்திரத்தை ரத்து செய்துவிட்டு பேபி பெயருக்கு கிரையம் செய்து கொடுக்க கட்டாயப்படுத்தியதாகவும், அவர்கள் சடையனை அடித்தும் மிரட்டியும் கைரேகை பெற்று பத்திர பதிவு செய்து கொண்ட பின்பு சடையனை காரில் ஏற்றி கொண்டு சென்று திண்டுக்கல் அருகில் இறக்கிவிட்டு சென்றுவிட்டதாகவும், அங்கிருந்து 10 நாட்கள் கழித்து சடையன் வீடு வந்து சேர்ந்தார் என்று முருகேசன் என்னிடம் சொன்னதாகவும், இது சம்பந்தமாக முருகேசன் கொடுத்த புகாரின் பேரில் மகுடஞ்சாவடி போலீசார் வழக்கு பதிவு செய்ததாகவும், அதன் பின்பு 1ம் எதிரி மேற்படி நிலங்கள் அனைத்தையும் கிரையம் பெற்று கொண்டதாகவும், அவர் சுமார் 200 நபர்களுடன் வைத்தி, கருப்பண்ணன், பச்சமுத்து, தமிழ்செல்வன் ஆகியோருடனும் லாரி, JCB மற்றும் டிராக்டர் உடன் வந்து அந்த நிலத்திலிருந்த தார்சு வீடுகள், கொட்டைகள், ஆகியவற்றை இடித்தும், தென்னை மரத்தை பிடிங்கி, கிணற்றை தேசப்படுத்தி அந்த நிலத்தை ஆக்கிரமிப்பு செய்து கொண்டதாகவும், அதனால் முருகேசன் குடும்பத்துடன் தனது மாமனார் வீட்டிற்கு சென்று விட்டார் என்றும், இது சம்பந்தமாக சேலம் மாவட்ட குற்ற பிரிவு போலீசார் எனக்கு அனுப்பிய அழைப்பாணையின் பேரில் நேரில் விசாரணைக்கு ஆஜராகி மேற்படி விவரங்கள் அனைத்தையும் சொல்லிவிட்டு தற்போது 1, 9 எதிரிகள் எனக்கு பழக்கமானவர்கள் என்பதால் அவர்களையும் மற்ற எதிரிகளையும் இந்த வழக்கிலிருந்து காப்பாற்றுவதற்காக உண்மையை மறைத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/-தங்கராஜ்

Sd/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.